# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8097143

1. District : நாமக்கல் மாவட்டம் | PS: ஊ.த.க.பிரிவு காவல்நிலையம் | Year: 2018 ஆண்டு | FIR No.: 5/AC/2018 முத.அ. எண் | Date: 7.2.2018 நாள்

2. (i) Act சட்டம்: இ.த.ச. — Sections பிரிவுகள்: 102
   (ii) Act சட்டம்: ஊழல் தடுப்பு சட்டம் 1988 — Sections பிரிவுகள்: 8, 13(2) r/w 13(1)(d)
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from : 06.2.2018 நாள் முதல் — Date to : 07.2.2018 நாள் வரை
   Time Period : நேர அளவு
   Time from : 17.00 மணி முதல் நேரம் முதல் — Time to : 01.30 மணி வரை நேரம் வரை

   (b) Information Received at PS. Date : 07.2.2018
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் — Time நேரம் : 05.00 மணி.

   (c) General Diary Reference : Entry No(s) Vol. I
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time நேரம் : 05.00 மணி

4. Type of Information : Written/ Oral :
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — திடீர் தணிக்கையின் போது கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 4 கி.மீ. வடமேற்கு.
   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி நாமக்கல் மாவட்டம், நாமக்கல் (தெற்கு) வட்டார போக்குவரத்து அலுவலகம்.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P S — District —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : G.V. கிருஷ்ணராஜன்
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
   (b) Father's/ Husband's Name : வேட்டையன்
   தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு
   (d) Nationality : நாட்டினம் இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் காவல் துறை கண்காணிப்பாளர்
   (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கிருஷ்ணகிரி (பொறுப்பு) நாமக்கல்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   (1) K.S. துரைசாமி, வட்டார போக்குவரத்து அலுவலர் (2) P.K. இளங்கோ, மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I, (3) M. மோகன் (4) S. அஜித் (5) C. பாரதி (6) A. நாகராஜ் (7) D. தர்மராஜ் (8) M. சரவணன் (9) P. குணசேகரன்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

* GCP 240-34(Type 2) 90 000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed G.V. கிருஷ்ணராஜன் Rank கா.க. to take up the Investigation / Refused Investigation / transferred to PS ........—........ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................ பதவி ................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[signature] 7/2/18

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
07.02.2018 at
07.00மணி

Name: பெயர் G.V. கிருஷ்ணராஜன்
Rank: நிலை ................ No. எண் ........
காவல் துணை கண்காணிப்பாளர்
ஊழல் தடுப்பு மற்றும்
கண்காணிப்புப் பிரிவு, கிருஷ்ணகிரி
(பொறுப்பு) நாமக்கல்

**நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.5/AC/2018 பிரிவு 102 கு.வி.மு.ச. மற்றும் 8, 13(2) உ/இ 13(1)(d) ஊழல் தடுப்புச் சட்டம் 1988 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வரிசை எண்.12-ன் விபரம்:**

கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைக் கண்காணிப்பாளர் மற்றும் பொறுப்பு நாமக்கல் ஆகிய நான் 06.02.2018–ஆம் தேதி செவ்வாய்கிழமை மாலை 17.00 மணி முதல் 07.02.2018-ம் தேதி அதிகாலை 01.30 மணி வரையில் நாமக்கல் மாவட்டம், நாமக்கல் (தெற்கு) வட்டார போக்குவரத்து அலுவலர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் தணிக்கையில் கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இன்று 07.02.2018-ம் தேதி அதிகாலை 05.00 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு கு.எண்.05/AC/2018 பிரிவு 102 கு.வி.மு.ச. மற்றும் 8, 13(2) உ/இ 13(1)(d) ஊழல் தடுப்புச் சட்டம் 1988 படி பதிவு செய்யப்பட்ட வழக்கின் விபரம் பின்வருமாறு.

06.02.2018-ம் தேதி நாமக்கல் மாவட்டம், முதலைப்பட்டிபுதூரில் இயங்கிவரும் நாமக்கல் தெற்கு வட்டார போக்குவரத்து அலுவலர் அலுவலகத்தில் வட்டார போக்குவரத்து அலுவலர், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள், புதிய வாகனப்பதிவு, பழகுநர் உரிமம் அளித்தல், ஓட்டுநர் உரிமம் அளித்தல், வாகன உரிமையாளர் பெயர் மாற்றம், வாகனத்தின் பதிவு முகவரி மாற்றம், வாகன ஆண்டு புதுப்பித்தல் சான்று வழங்குதல் போன்ற காரணங்களுக்காக பொதுமக்களிடமிருந்து நேரடியாகவும், புரோக்கர்கள் மூலமாகவும் 06.02.2018-ம் தேதி அலுவல் நேரத்திலும், அதற்கு பின்பும் கையூட்டு பெருமளவு கைமாறப்போவதாக கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் 06.02.2018-ம் தேதி மாலை 16.45 மணிக்கு நான் அரசு சாட்சிகள் திரு.ப.அருள், மண்டல துணை வட்டாட்சியர் எண்.2, நாமக்கல் தாலுக்கா, நாமக்கல் மாவட்டம் மற்றும் திரு.கு.பாரதிராஜா, வருவாய் ஆய்வாளர், நாமக்கல் வட்டம், நாமக்கல் மாவட்டம் மற்றும் காவலர்கள் குழுவுடன் அரசு வாகனத்தில் நாமக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அலுவலகத்திலிருந்து புறப்பட்டு நாமக்கல் தெற்கு வட்டார போக்குவரத்து அலுவலர் அலுவலகத்திற்கு மாலை 17.00 மணிக்கு சென்றேன். வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் தரைதளத்தில் உள்ள மோட்டார் வாகன ஆய்வாளர் அறை, பணியாளர்கள் அறைகளில் உள்ள அலுவலர்கள் மற்றும் அந்த அலுவலக வளாகத்தைச் சுற்றி யாரும் வெளியே செல்லா வண்ணம் காவலர்களை கொண்டு காப்பு போடப்பட்டது. வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உள்ளே நுழைந்து கட்டிடத்தின்

மேல்தளத்தில் மத்திய அறையில் நுழைந்தபோது வட்டார போக்குவரத்து அலுவலர் இருக்கையில் அமர்ந்திருந்த நபரிடம் நான் என்னையும், என்னுடன் வந்த அரசு சாட்சிகளையும் மற்றும் காவலர்களையும் அவரவர்களின் அடையாள அட்டைகளை காட்டி அறிமுகம் செய்து வைத்தேன். பின்பு நான் அவரைப்பற்றி விசாரிக்க, அவர் தனது பெயர் திரு.K.S.துரைசாமி என்றும், வட்டார போக்குவரத்து அலுவலராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். நான் மற்றும் குழுவினர் வட்டார போக்குவரத்து அலுவலரிடம் அவருடைய அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்ய வந்திருப்பதாக தகவல் தெரிவித்து, அதன்பிறகு சாட்சிகள் முன்னிலையில் அந்த அலுவலகத்தை திடீர் தணிக்கை மேற்கொண்டேன். அவருடைய அறையில் ஒரு நபர் கையில் கோப்புகளுடன் இருந்தார். அவரைப்பற்றி விசாரிக்க தனது பெயர் M.மோகன் என்று தெரிவித்தார். அவருடைய கையில் உள்ள கோப்புகளை வாங்கிப் பார்க்க வட்டார போக்குவரத்து அலுவலகம் சம்பந்தப்பட்ட கோப்புகளை வைத்திருந்தார். அதைப்பற்றி அவரிடம் கேட்க, தான் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு அடிக்கடி வந்து அலுவலர்களுக்கு தேவையான உதவிகளை செய்து வருவதாகவும், கோப்புகளில் வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் ஆகியோர்களிடம் கையொப்பங்கள் வாங்கி வாடிக்கையாளர்களுக்கு தேவையான உதவிகளை செய்து வருவதாகவும் தெரிவித்தார். சந்தேகத்தின் அடிப்படையில் அவரை சோதனை செய்து பார்க்கையில், அவருடைய பேண்டின் வலது பாக்கெட்டில் ரூ.25,000/- வைத்திருந்தார். அந்த பணத்திற்குண்டான விளக்கத்தை கேட்டபோது அவர் முன்னுக்குப்பின் முரணாக பதில் கூறினார். அவருடைய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும், சந்தேகத்திற்கு இடமளிக்கும் வண்ணம் இருந்ததாலும், அந்த பணம் ரூ.25,000/-ஐ நான் விசாரணைக்காக கைப்பற்றிக்கொண்டேன். அவரிடமிருந்த வட்டார போக்குவரத்து அலுவலக ஆவணங்களை பெற்று வட்டார போக்குவரத்து அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டது. சந்தேகத்தின் அடிப்படையில் வட்டார போக்குவரத்து அலுவலரின் அறை முழுவதும் சோதனையிடப்பட்டது. அவருடைய இருக்கையின் வடக்குப்பக்கம் இருந்த ஒரு இரும்பு பெஞ்சின் மீது அடுக்கி வைக்கப்பட்டிருந்த இரு கோப்புகளுக்கு நடுவில் ரூ13,000/- மறைத்து வைக்கப்பட்டிருந்தது. பிறகு வட்டார போக்குவரத்து அலுவலரின் மேஜையின் வலது பக்க டிராயரை பார்வையிட்டதில் அதில் ரூ.15,000/- இருந்தது. மேற்படி தொகைகள் மொத்தம் ரூ.28,000/- பற்றி வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.துரைசாமி அவர்களிடம் கேட்டபோது, அந்த பணம் எப்படி அங்கு வந்தது என்று தனக்கு தெரியவில்லை என்று

தெரிவித்தார். அவருடைய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும், சந்தேகத்திற்கு இடமளிக்கும் வண்ணம் இருந்ததாலும், அந்த பணம் ரூ.28,000/-ஐ நான் விசாரணைக்காக கைப்பற்றிக்கொண்டேன். பின்னர் வட்டார போக்குவரத்து அலுவலரை அழைத்துக்கொண்டு கட்டிடத்தின் தரைதளத்திற்கு வரப்பட்டது. அங்கு மோட்டார் வாகன ஆய்வாளரின் அறைக்கு செல்லப்பட்டது, அங்கு மோட்டார் வாகன ஆய்வாளரின் இருக்கையில் திரு.P.K.குமார் என்பவர் அமர்ந்திருந்தார். அந்த அறையினுள் மேலும் ஒரு நபர் இருந்தார். அவரை பற்றி விசாரிக்க, தனது பெயர் அஜித் என்று சொன்னார். பிறகு சாட்சிகள் முன்னிலையில் மோட்டார் வாகன ஆய்வாளரின் மேஜை சோதனையிடப்பட்டது. அந்த மேஜையின் வலது பக்க மேல் டிராயரில் பணம் மடித்து வைக்கப்பட்ட நிலையில் மொத்தம் ரூ.34,500/- இருந்தது. அந்த பணத்திற்குண்டான விளக்கத்தை அவரிடம் கேட்டபோது அவர் முன்னுக்குபின் முரணாக பதில் அளித்தார். அவருடைய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும், சந்தேகத்திற்கு இடமளிக்கும் வண்ணம் இருந்ததாலும், அந்த பணம் ரூ.34,500/-ஐ நான் விசாரணைக்காக கைப்பற்றிக்கொண்டேன். பிறகு அங்கிருந்த அஜித் அவர்களை சந்தேகத்தின் அடிப்படையில் சோதனையிட்டபோது அவருடைய இடது பேண்ட் பாக்கட்டில் மடிப்புடன் பணம் மொத்தம் ரூ.80,000/- இருந்தது. அந்த பணத்தைப்பற்றி அவரிடம் விசாரிக்க, தான் செல்லாண்டியம்மன் டிரான்ஸ்போர்ட்டில் வேலை செய்து வருவதாகவும், அதன் உரிமையாளர் தண்டபாணி என்பவர் வட்டார போக்குவரத்து அலுவலருக்கு பணம் ரூ.80,000/-ஐ புரோக்கர் மோகன் மூலமாக கொடுத்துவிட்டு வருமாறு தன்னை அனுப்பியதாக தெரிவித்தார். அந்த பணம் வட்டார போக்குவரத்து அலுவலருக்கு இலஞ்சமாக கொடுக்க கொண்டு வந்திருந்த காரணத்தினால் அந்த பணம் ரூ.80,000/-ஐ நான் விசாரணைக்காக கைப்பற்றிக்கொண்டேன். பிறகு மோட்டார் வாகன ஆய்வாளரின் அறையில் வடக்கு பக்கம் வைக்கப்பட்டிருந்த இரண்டு இரும்பு ரேக்குகள் சோதனையிடப்பட்டது. அதில் முதல் இரும்பு ரேக்கில் மையப்பகுதியில் வைக்கப்பட்டிருந்த ஒரு சிகப்பு நிற பிளாஸ்டிக் கூடையில் பணம் ரூ.9,050/- கிடப்பில் போடப்பட்டிருந்தது. அந்த பணத்திற்குண்டான விளக்கத்தை மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கேட்டபோது, அதைப்பற்றி தனக்கு தெரியாது என்று கூறினார். அந்தப்பணத்திற்கு யாரும் உரிமை கோராததால் அந்த பணம் ரூ.9,050/-ஐ நான் விசாரணைக்காக கைப்பற்றிக்கொண்டேன். பிறகு நான், அரசு சாட்சிகள், வட்டார போக்குவரத்து அலுவலர், நேர்முக உதவியாளர் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர்

ஆகியோர்களை அழைத்துக்கொண்டு அருகில் இருந்த அலுவலக பணியாளர்களின் அறைக்குச் சென்றேன். அங்கிருந்த அலுவலர்களிடம் அன்றைய தினம் வசூல் செய்யப்பட்டு அரசுக்கு செலுத்தவேண்டிய தொகை விபரம் குறித்து கேட்டு சரிபார்க்கப்பட்டதில் சரியாக இருந்தது. மேலும் பணியாளர்களின் சொந்தப்பணம் குறித்த பதிவேட்டுடன் அவர்களது கையிருப்புத்தொகை குறித்து கேட்டு சரிபார்க்கப்பட்டது. பின் அங்கிருந்த மற்ற நபர்களை பற்றி விசாரிக்க ஒருவர் தனது பெயர் திரு.C.பாரதி என்றும், தான் அவ்வப்போது வட்டார போக்குவரத்து அலுவலகம் வந்து அலுவலர்களை சந்தித்து அவர்களுக்கு உதவியாக பணிகளை செய்து வருவேன் என்று கூறினார். அவரிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்டு சோதனையிட அவர் அவரது பேண்ட் பாக்கெட்டில் ஒரு சீட்டுடன் மொத்தம் ரூ.30,880/-ஐ மடித்து வைத்திருந்தார். அந்தப்பணத்தைப் பற்றி கேட்டபோது அவர் வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் அதிகாரிகளுக்கு லஞ்சமாக கொடுப்பதற்காக கொண்டுவந்ததாக தெரிவித்தார். அதனால் அந்த பணம் ரூ.30,880/-ஐ நான் விசாரணைக்காக கைப்பற்றிக்கொண்டேன். பின் அவர் ஆஜர் செய்த பணத்துடன் இருந்த சீட்டு பார்வையிடப்பட்டது. அதில் TN 28/AH 4880 – FC உள்ளிட்ட 15 வாகனங்களின் பதிவு எண்கள் பேனாவால் கைப்பட எழுதப்பட்டுள்ளது. அந்த சீட்டை நான் விசாரணைக்காக கைப்பற்றிக்கொண்டேன். பின்பு அங்கிருந்த மற்றொரு நபரைப்பற்றி விசாரிக்க அவர் தனது பெயர் A.இராமசாமி என்றும், தான் அவ்வப்போது வட்டார போக்குவரத்து அலுவலகம் வந்து அவர்களுக்கு உதவியாக பணி செய்து கொடுத்து வருவதாக கூறினார். மேலும் சந்தேகத்தின் அடிப்படையில் அவரை சோதனை செய்து பார்க்கையில் அவருடைய பேண்ட் பாக்கட்டில் மடித்துவைக்கப்பட்ட நிலையில் பணம் மொத்தம் ரூ.15,600/- இருந்தது. அந்த பணத்திற்கு அவரால் உரிய விளக்கம் அளிக்க இயலவில்லை. அவருடைய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும், சந்தேகதத்திற்கு இடமளிக்கும்விதம் இருந்ததாலும் அந்தப்பணம் ரூ.15,600/-ஐ நான் விசாரணையின் நிமித்தம் கைப்பற்றிக்கொண்டேன். மேலும் அவர் வைத்திருந்த இரசீதுகளை பார்வையிட்டதில் TAMILNADU TRANSPORT DEPARTMENT இரசீது எண்கள் 5259049, 5259053, 5259054, 5259890, 5252063, 5249691 மற்றும் TN 28 AA 4641, TN 28 AE 4627, TN 28 AM 1498, TN 28 AC 7753 என்று வரிசையாக குறிக்கப்பட்டு அதற்கு கீழ் ரூ.18,000/- எனக்குறிக்கப்பட்ட ஒரு வெள்ளைச்சீட்டும் மற்றும் TN 28 M 7826 - 4500, TN 88 6718 – 5700, TN 28 AH 1248 – 4500, TN 88 A 9385 – 5700,

TN 28 AQ 2140 – 3100, KA 34 B 3814, KA 01 B 5180 என வரிசையாக குறிக்கப்பட்ட பச்சை நிற சீட்டு ஒன்றும் இருந்தன. அவைகளை நான் விசாரணைக்காக கைப்பற்றிக்கொண்டேன். மேலும் சாட்சிகளின் உதவியுடன் அலுவலர்கள் இருந்த அந்த அறை முழுவதும் சோதனையிடப்பட்டதில் அந்த அறையின் நுழைவு வாயிலுக்கு கிழக்குப்பக்கம் இரும்பு அலமாரிகளுக்கு இடையே வைக்கப்பட்டிருந்த அட்டை குப்பைத்தொட்டியில் ரூபாய் நோட்டுகள் மொத்தம் ரூ.16,800/- கிடப்பில் போடப்பட்டிருந்தது. அந்த பணத்திற்கு யாரும் உரிமை கோராததால் நான் அந்தப்பணம் ரூ.16,800/-ஐ விசாரணைக்காக கைப்பற்றிக்கொண்டேன். பிறகு அலுவலக வராண்டாவில் இருந்த மூன்று நபர்களை அரசு சாட்சிகள் முன்னிலையில் நான் விசாரித்தேன். அவர்களில் திரு.D.தர்மராஜா என்பவரின் கையில் சில கோப்புகள் இருந்தது. சந்தேகத்தின் அடிப்படையில் அவரை சோதனை செய்து பார்க்கையில் அவரது வலது பேண்ட் பாக்கட்டில் பணம் மொத்தம் ரூ.16,000/- இருந்தது. அந்த பணத்திற்கு அவரால் அளிக்கப்பட்ட விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாததாலும் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் இருந்ததாலும் அந்தப் பணம் ரூ.16,000/-ஐ நான் விசாரணையின் நிமித்தம் கைப்பற்றிக்கொண்டேன். அவர் கையில் வைத்திருந்த கோப்புகள் பார்வையிடப்பட்டு பின் அவரிடமே திருப்பிக்கொடுக்கப்பட்டது. பின்னர் அவர் அருகில் இருந்த திரு.M.சரவணன் என்பவரின் கையில் சில கோப்புகள் இருந்தது. சந்தேகத்தின் அடிப்படையில் அவரை சோதனை செய்து பார்க்கையில் அவரது இடது பக்க பேண்ட் பாக்கட்டில் ரூபாய் நோட்டுகள் மொத்தம் ரூ.31,150/- மடித்து வைக்கப்பட்டிருந்தது. அது குறித்து அவரிடம் கேட்டபோது அவருடைய விளக்கம் ஏற்கத்தக்க வகையில் இல்லாமல் முன்னுக்குபின் முரணாக இருந்ததால் அந்தப் பணம் ரூ.31,150/-ஐ நான் விசாரணையின் நிமித்தம் கைப்பற்றிக்கொண்டேன். பின்பு அவர் கையில் இருந்த ஆவணங்கள் பார்வையிடப்பட்டு அவரிடமே திருப்பிக்கொடுக்கப்பட்டது. பின் அருகில் இருந்த திரு.P.குணசேகரன் அவர்களை விசாரிக்க அவர் வாடிக்கையாளர்களுக்கு தேவையான உதவிகளை வட்டார போக்குவரத்து அலுவலர்கள் மூலம் முடித்துக்கொடுப்பதாகவும் அதற்காக இன்று அலுவலகம் வந்ததாகவும் சொன்னார். சந்தேகத்தின் அடிப்படையில் அவரை சோதனை செய்து பார்க்கையில் அவரது பேண்டின் வலது பக்க பாக்கட்டில் மடித்து வைக்கப்பட்ட நிலையில் பணம் மொத்தம் ரூ.19,000/- இருந்தது. இது தொடர்பாக அவர் கொடுத்த விளக்கம் முன்னுக்கு பின் முரணாக சந்தேகத்திற்கு இடமளிக்கும்

வகையில் இருந்தது. அதனால் அந்த பணம் ரூ.19,000/-ஐ நான் விசாரணைக்காக கைப்பற்றிக்கொண்டேன். பின் அலுவலர்களின் சொந்தப்பணம் குறித்த பதிவேட்டையும் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலக ஜனவரி 2018-ம் தேதி முதல் ஆரம்பிக்கப்பட்ட அலுவலகப் பணியாளர்களின் வருகைப்பதிவேடு ஆகியவைகள் விசாரணையின் நிமித்தம் அசலாக நான் கைப்பற்றிக்கொண்டேன். பிறகு 2018-ம் ஆண்டிற்குண்டான கொடிநாள் இரசீது பற்றி கேட்டு அவை சரிபார்க்கப்பட்டது. திடீர் தணிக்கையின் முடிவில் வட்டார போக்குவரத்து அலுவலர், மோட்டார் வாகன ஆய்வாளர் ஆகியோர்களின் இருக்கை மேஜைகளில் இருந்து எடுக்கப்பட்ட தொகை, அலுவலக அறைகளினுள் கேட்பாரற்று உரிமை கோரப்படாமல் கிடந்த தொகை மற்றும் அங்கு இருந்த வெளி நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட தொகைகளுக்கு அவர்காளல் கொடுக்கப்பட்ட விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இல்லாததும் சந்தேகத்திற்கு இடமளிக்கும் வண்ணம் இருந்ததும் மேலும் பொது ஊழியர்களான திரு.K.S.துரைசாமி-வட்டார போக்குவரத்து அலுவலர், திரு.P.K.குமார்-மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, ஆகியோர்கள் தனது அலுவல் பதவியை துஷ்புரயோகம் செய்து இடைத்தரகர்களிடமிருந்து ஆதாயம் பெறவேண்டும் என்ற எண்ணத்துடன் செயல்பட்டு வாகன உரிமையாளர்களின் ஆவணங்களுடனும் கணக்கில் வராத பணத்துடனும் அலுவலக நேரத்தில் இடைத்தரகர்களை அலுவலகத்தினுள் வர அனுமதித்து அதன் மூலம் ஆதாயம் அடைந்துள்ளார்கள் என்பதற்கான போதுமான முகாந்திரம் உள்ளது. அதேபோல் இடைத்தரகர்களான திரு.M.மோகன், திரு.S.அஜித், திரு.M.சரவணன், திரு.D.தர்மராஜா, திரு.P.குணசேகரன், திரு.A.ராமசாமி மற்றும் திரு.C.பாரதி ஆகியோர்கள் வாகன உரிமையாளர்களிடமிருந்து பணத்தையும் ஆவணங்களையும் பெற்றுக்கொண்டு சட்டவிரோதமான வழிகள் மூலம் பொது ஊழியர்களான திரு.K.S.துரைசாமி-வட்டார போக்குவரத்து அலுவலர், திரு.P.K.குமார்-மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, ஆகியோர்களை ஆதாயம் கொடுத்து வசப்படுத்தி அவர்களுடைய வேலையை முடித்துக்கொள்வதற்காக அலுவலக நேரத்தில் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்குள் வந்ததிற்கான போதுமான முகாந்திரம் உள்ளது. ஆகவே இன்று 07.02.2018-ம் தேதி காலை 05.00 மணிக்கு எதிரிகள் திரு.K.S.துரைசாமி - வட்டார

போக்குவரத்து அலுவலர், திரு.P.K.குமார்-மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, ஆகியோர்கள் மீதும் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்குள் சந்தேகத்திற்கிடமான வகையில் பணத்துடன் இருந்த இடைத்தரகர்கள் திரு.M.மோகன், திரு.S.அஜித், திரு.M.சரவணன், திரு.D.தர்மராஜா, திரு.P.குணசேகரன், திரு.A.ராமசாமி மற்றும் திரு.C.பாரதி ஆகியோர்கள் மீதும் நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு கு.எண்.05/AC/2018 பிரிவு 102 கு.வி.மு.ச. மற்றும் 8, 13(2) உ/இ 13(1)(d) ஊழல் தடுப்புச் சட்டம் 1988 படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் திடீர் தணிக்கையின்போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கைகளின் அசல் ஆகியவற்றை நாமக்கல் சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

7/2/18

G.V.கிருஷ்ணா ராஜன்,
துணைக் காவல் கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கிருஷ்ணகிரி (பொறுப்பு) நாமக்கல்.